# தேவஇயல்

## 11. தேவனைப் பற்றிய பல்வேறு கண்ணோட்டங்கள்

ஏதோ ஒரு இருப்பு அல்லது வல்லமையானது இந்த அண்டசராசரத்தை உருவாக்கி கவனித்து வருகிறது என்று சொல்லக்கூடிய அனேக கருத்துக்கள் உண்டு மற்றும் அதோடுகூட தேவன் இல்லை; அப்படி அவர் இருந்தால் அவரை கண்டுபிடிக்க இயலாது என்றெல்லாம் பல கருத்துக்கள் உண்டு. இவையெல்லாம் தேவனை குறித்த தவறான கண்ணோட்டங்கள் ஆகும். எனவே. இந்த கண்ணோட்டங்களில் சிலவற்றை நாம் பார்க்கவேண்டியது தேவையாயிருக்கிறது.

a. ஏத்தீஸம் (Atheism) - இது நாத்திகம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு கிரேக்க பதமாகும். ‘ஏ’ என்பதற்கு ‘இல்லை’ என்றும்; ‘தியோஸ்’ என்பதற்கு ‘தேவன்’ என்றும் அர்த்தப்படுகிறது. இது கடவுள் இல்லை என்னும் கொள்கை ஆகும்; இதை ‘இறைமறுப்பு கோட்பாடு’ என்றும் சொல்லலாம். நாத்திகர்கள் தேவனில் விசுவாசம் வைப்பதில்லை; இவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் எந்த இருப்பும் இல்லை என்றும் விசுவாசிக்கிறவர்கள். இவர்கள் தேவன் இல்லை என்பதை நிரூபிக்கவும் முயற்சிக்கிறார்கள். இந்த நாத்திகக்கொள்கை பழைய ஏற்பாட்டில் தாவீதின் காலத்திலேயே இருந்திருக்கிறது. ஆம்! தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான் (சங்14:1). அந்த வசனத்திலேயே அடுத்ததாக ‘அவர்கள் தங்களைக் கெடுத்து’ என்று வருகிறது. அவர்கள் தங்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பதே உண்மை. ஜனங்கள் நாத்திகர்களாக இருக்கவேண்டும் என்பதல்ல; மாறாக, அவர்கள் ஜீவனுள்ள தேவனை விசுவாசிக்க வேண்டும் என்பதே தேவனின் விருப்பமாய் இருக்கிறது.

<u>இரண்டுவித நாத்திகவாதிகள் இவ்வுலகில் உள்ளனர்.</u>

- முதலாவது (Stornge atheist) - இவர்கள் தேவன் இல்லை என்ற கொள்கையில் மிகவும் உறுதியாக இருப்பவர்கள் மற்றும் தங்கள் கொள்கையை மற்றவர்களிடம் பரப்புவார்கள்.
- இரண்டாவது (Weak atheist) - இவர்கள் தேவன் இல்லை என்ற கொள்கையில் இருந்தாலும் தங்கள் கொள்கையை மற்றவர்களிடம் பரப்புவதில்லை மற்றும் மற்றவர்களிடம் தர்க்கமும் செய்வதில்லை.

b. அக்நோஸ்டிசிஸம் (Agnostism) என்பது ‘அறியஒனாமை கொள்கை’ எனப்படுகிறது. இது ஒரு கிரேக்க பதமாகும். ‘ஏ’ என்றால் ‘இல்லை’ என்றும்; ‘நாசஸ்’ என்றால் ‘அறிவு’ என்றும் அர்த்தப்படுகிறது. இதன் அர்த்தம் ‘அறிவு இல்லாமை’ என்பதாகும். தேவன் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது அல்லது நிரூபிப்பது என்பது சாத்தியமே இல்லை என்பதுதான் இவர்களின் கருத்து ஆகும். ‘அறியஒனாமை கொள்கை’யானது நாத்திகத்தின் நேர்மையான அறிவார்ந்த அமைப்பு ஆகும். நாத்திகவாதம் தேவன் இல்லை என்றும்; அவர் இருப்பதை நிரூபிக்க முடியாது என்றும் கூறுகிறது. ‘அறியஒனாமை கொள்கை’ தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது எனவே, தேவன் இருக்கிறாரா இல்லையா என்பதை அறிந்துகொள்வது சாத்தியமில்லாதது என்று வாதாடுகிறது. ஆனால் தேவனை விசுவாசித்துதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் (எபி 11:6). உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய் (உபா 4:29).

c. பாலிதீஸம் (Polytheism) - இது ஒரு கிரேக்க பதமாகும். ‘பாலி’ என்றால் ‘பல’ என்றும் ‘தியோஸ்’ என்பதற்கு ‘தேவன்’ என்றும் அர்த்தப்படுகிறது. இது பல தெய்வங்கள் உள்ளன என்ற நம்பிக்கையுடைய கோட்பாடு ஆகும். இந்த கோட்பாட்டாளர்கள் அனேக கடவுள்கள் உள்ளனர் என்று விசுவாசிக்கின்றனர். பண்டைய காலங்களில் பல தெய்வ வணக்கத்திற்கு உதாரணம் கிரேக்க, ரோமானிய புராணங்கள் ஆகும், ஜுயஸ், அப்பல்லோ, அப்ரோடைட் மற்றும் போஸிடான் அவைகளில் குறிப்பிடத்தக்கவையாகும். பல தெய்வ மதங்களில் பொதுவாக ஒரு கடவுள் மற்ற கடவுள்களை விட உயர்ந்தவராக இருக்கிறார். உதாரணமாக: கிரேக்க, ரோமானிய புராணங்களில் ஜுயஸ் உயர்ந்தவராகவும், இந்து மதத்தில் பிரம்மா உயர்ந்தவனாகவும் கருதப்படுகின்றனர். வேதாகமத்தில் பல தெய்வ வணக்கங்கள் இருந்ததை பற்றி சொல்லப்படுகிறது. தேவனின் தெரிந்துகொள்ளப்பட்ட சிலரும்கூட விக்கிரக ஆராதனையும், அந்நிய தேவர்களை வணங்குவதில் விழுந்தார்கள். ஆனால் இஸ்ரவேலுக்கு கற்பிக்கப்பட்ட பாடம் ஜீவனுள்ள தேவன் ஒருவர் மட்டுமே என்பதுதான் (உபாகமம் 6:4).

மேலும் சிலர் ‘ஏலோஹிம்’ என்ற பதத்தை வைத்துக்கொண்டு அனேக தேவர்கள் என்று கூற முற்படுகிறார்கள். ஆனால் வேதத்தின் வெளிச்சத்தில் ஒழுங்காய் கவனிக்கும்போது தேவத்துவத்தில்

பன்மை காணப்பட்டாலும் பன்மையான தேவன் ஒருவராகவே இருக்கிறார் என்பது புரியும். சிருஷ்டிப்பில் 'ஏலோஹிம்' என்ற பதம் சொன்னாலும், இது எழுவாயின் வினைச்சொல்லானது 'படைத்தார்கள்' என்று பன்மையாக சொல்லப்படாமல் 'படைத்தார்' என்று ஒருமையில் சொல்லப்படுகிறது (ஆதி 1:1). இது பன்மையான தேவன் ஒரே தேவனாக ஒரே சாராம்சத்தை உடையவராக இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. ஆகவே, பரிசுத்தவேதம் வெளிப்படுத்துகின்ற தேவன் ஒருவரே ஆவார்; அவரை அல்லாமல் வேறு தேவர்கள் இல்லை

d. பாந்திஸம் (Pantheism) - 'பான்' என்றால் 'அனைத்தும்' என்றும் 'தியோஸ்' என்பதற்கு 'தேவன்' என்றும் அர்த்தப்படுகிறது. இவர்களின் கோட்பாடு 'இயற்கையாவும் இறை உருவே' என்பதாகும். கடவுள் அனைத்திலும் இருக்கிறார் என்பதாகும்; இந்த கோட்பாடு எல்லோரும் எல்லாமே தேவன் என்பதை நம்புவதாகும். அனைத்தும் கடவுள் கொள்கையானது பல தெய்வகொள்கையோடு பொருந்தகூடியதாகவே காணப்படுகிறது. மரம், பாறை, விலங்கு, வானம், சூரியன் மற்றும் நாம் ஒவ்வொருவரும் கூட தேவன்தான் என்று கற்பிக்கிறது. அனைத்தும் கடவுள் கொள்கை என்பது பல வகையான வழிபாடு முறைகள் மற்றும் தவறான மதங்களுக்குப் பின்னால் உள்ள கருத்தாகும்.

பரிசுத்த வேதம் அனைத்தும் கடவுள் என்ற கொள்கையை கற்பிக்கவில்லை. அனேகர் தேவனுடைய சர்வவியாபக தன்மைதான் 'அனைத்தும் கடவுள் கொள்கை' என்று குழப்பிக்கொள்கிறார்கள். தேவன் சர்வவியாபி (சங்கீதம் 139:7,8) என்றால் அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார்; அவர் இல்லாத இடமே இந்த முழு அண்ட சராசரத்தில் இல்லை என்பதேயாகும். இது 'அனைத்தும் கடவுள் கோட்பாடு' போன்றதல்ல. தேவன் எல்லா இடங்களிலும் பிரசன்னராய் இருக்கிறார். தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறாரே தவிர எல்லா வஸ்துக்களும் இல்லை. இரட்சிக்கப்பட்ட மனிதனுக்குள் தேவன் இருக்கிறார் ஆனால், அது அந்த மனிதனை தேவனாக ஆக்குவதில்லை. பாவபிரசன்னம் நிறைந்த உலகத்தில் வாழ்கின்ற இரட்சிக்கப்பட்ட மனிதனை சரியான சத்தியத்தின் வழியில் நடத்தவே மனிதனுக்குள் வாசம் செய்கிறார்; மாறாக அவனையே தேவனாக மாற்றி அவனை வழிபடும் பொருளாக மாற்றுவதற்கு அல்ல.

e. டுவல்லிஸம் (Dualism) - இதை 'இரு கடவுள் கொள்கை' அல்லது 'இருபொருள் வாதம்' என்றும் கூறலாம். 'டுவல்' என்ற லத்தீன் சொல்லுக்கு இரண்டு என்று அர்த்தம். இருபொருள் வாதமானது எதிரெதிரான நிலையில் சமமான வல்லமை உள்ள இரு கடவுள்கள் இருக்கிறார்கள் என்பதே ஆகும். இதில் ஒன்று நல்லது மற்றது கெட்டது என்று கருதப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டான மதம் 'சொராஸ்டிரியநிஸம்' ஆகும். நாம் இந்த அண்டசராசரத்தின் படைப்பைப் பற்றிய பண்டைய மக்களின் பல்வேறு கருத்துக்களைப் பார்த்தோமானால் அவைகளில் இரு கடவுள் கோட்பாட்டை காணமுடியும். அநேக படைப்பின் கருத்துக்கள் இந்த இரு கடவுள் கோட்பாட்டையே அடிப்படையாக வைத்து இருக்கின்றனர். நல்லது நல்ல வல்லமையையும், கெட்டது தீய வல்லமையையும் உற்பத்தி செய்வதாக கருதப்படுகிறது.

கிறிஸ்தவத்தில் இருபொருள் வாதமாக தேவன் நல்லவராகவும் சாத்தான் தீயவனாகவும் இருக்கிறான் என்று கூறி இரு கடவுள்கள் என்று கூற முடியாது. ஏனென்றால், சாத்தான் வரையறைக்கு உட்பட்டவன்; அவன் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட 'கேருப்' ஆவான். ஆனால் தேவனோ வரையறைக்கு உட்படாத சிருஷ்டிகர் ஆவார். தேவன் மட்டுமே சர்வ வல்லமை உள்ளவராக இருக்கிறார்; ஆனால், சாத்தான் வல்லமை உள்ளவனாய் இருக்கிறான். அவன் தேவன் அனுமதித்த வரையறைக்குள் மட்டுமே இயங்கிக்கொண்டிருக்கிறான். ஆனாலும் அவன் சீக்கிரத்தில் முடிவடையப்போகிறான். தேவன் மாத்திரமே மகா பெரியவர். அவருக்கு நிகராகவும் ஒப்பாகவும் ஒருவரும் இல்லை.

f. ஓப்பன்தீஸம் (Openthism) - திறந்தநிலை ஆத்தீகம். இந்த திறந்தநிலை ஆத்தீகமானது 'திறந்தநிலை இறைஇயல்' மற்றும் 'தேவனுடைய திறந்தநிலை தன்மை' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் வாதம் மனிதர்கள் சுதந்திரமானவர்கள் என்பதே! அதாவது எதிர்காலத்தைப்பற்றி முழுமையும் தேவனுக்கு தெரியாது. தேவன் எதிர்காலத்தை முற்றிலும் அறிந்திருந்தால் மனிதர்கள் உண்மையிலேயே சுதந்திரமாக இருக்கமுடியாது. தேவன் அறியக்கூடிய அனைத்தையும் அறிவார். ஆனால், எதிர்காலத்தை அவர் அறியவில்லை என்கிறது. இந்த நம்பிக்கைகளை வேத வசனங்களின் அடிப்படையிலேயே கொண்டிருக்கிறது (ஆதி 6:6; 22:12; யாத் 32:14; யோனா 3:10).

ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய தேவனுடைய சர்வஞானத்தை அறிவிக்கும் பல வேத வசனங்களில் தேவன் தம்மை விவரிப்பதை அனுசரித்து நாம் புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய

செயல்களும் முடிவுகளும் என்னவாக இருக்கும் என்பதை தேவன் நன்கு அறிவார். ஆனால் நம்முடைய செயல்களை அடிப்படையாகக்கொண்ட அவருடைய செயல்களைப் பொறுத்தவரை அவர் மனதை மாற்றிக்கொள்கிறார் (எரேமியா 18:8; 26:13; சங்கீதம் 139:4,16). திறந்தநிலை ஆத்தீகம் விவரிக்க முடியாததை விளக்க முயற்சி தோல்வியுற்றதாகிறது. கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட வேதத்தை கையாளுவதில் கவனமாய் இருக்கவேண்டும். விவரிக்க முடியாததை விளக்க முயற்சித்து புதிய மதத்திற்கு தலைவர்களாகிவிடகூடாது. வரையறையற்ற தேவனை வரையறையுள்ள நாம், நமது மூளைக்குள் சிறை பிடிக்கமுடியாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

g. ட்ரைதீஸம் (Tritheism) - முக்கடவுள் கொள்கை. 'ட்ரை' என்றால் மூன்று என்பது பொருள். இது மூன்று கடவுள்கள் இருக்கிறார்கள் என்ற கொள்கை ஆகும். சிலர் இதை கிறிஸ்தவத்தின் திரித்துவம் என்று சொல்லிக்கொள்கிறார்கள்; அது தவறு. வேதம் போதிப்பது ஒரே தேவன். அவர் மூன்று நபர்களாய் இருக்கிறார் என்பதே; மாறாக மூன்று கடவுள்கள் என்று சொல்வதில்லை. இந்த முக்கடவுள் கொள்கை சைவம் மற்றும் வைணவத்திலும் உள்ளது. முதன்மையான முக்கடவுள்களாக வைணவத்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா என்றும், சைவத்தில் சிவன், சக்தி, குமரனையும் கொண்டுள்ளது.

h. தீயஸம் (Theism) - 'தீயஸம்' என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. 'தீயஸ்' என்ற லத்தீன் வார்த்தைக்கு 'தேவன்' என்று பொருள். இவர்களின் கொள்கை என்னவெனில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் இவ்வுலகத்தை படைத்தார் என்றும் நம்புகிறார்கள். ஆனால், இவ்வுலகத்தை அவர் கட்டுப்படுத்துவதில்லை; பாதுகாக்கவில்லை, மாறாக; இவ்வுலகத்தை இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார் என்று நம்புகிறார்கள். மேலும் இவர்களின் கருத்து என்னவெனில் தேவனை இயற்கை மற்றும் அதன் காரணத்திலிருந்து அறிகிறோம் ஆனால் வேதத்திலிருந்து அறிவதில்லை என்கிறார்கள். தவறான இந்த கருத்தின் மூலமாக அவர்கள் தேவனின் சிறப்பு வெளிப்பாட்டையும், அற்புதத்தையும், தேவனின் வழங்குதலையும் மறுக்கிறார்கள்.

   i. ஆனால் தேவன் இயற்கை விதிகளுக்கு உட்பட்ட விதத்தில் மனிதர், விலங்குகள், பறவைகள் ஆகியவைகளின் தேவைகளை பொதுவான நிலையில் சந்திக்கிறார். இதில் கிறிஸ்தவர்களும் அடங்குவார்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் அடங்குவார்கள். இது தேவனின் பொதுவான போஷித்தல்விதி ஆகும் (மத் 6:26)
   ii. இரண்டாவதாக இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் என்பது இரண்டு விதங்களில் உள்ளது. ஒன்று வழங்குதல் மற்றொன்று அற்புதம்.
      - வழங்குதல் என்பது இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட செயல்களை கையாளுகிற தேவனாலே இரட்சிக்கப்பட்ட தம் பிள்ளைகளின் தேவைகள் சந்திக்கப்படுவதற்கு இயற்கை விதிகளுக்கு உட்பட்ட நிலையில் தேவன் வழங்குதலே ஆகும் (ஆதி 22: 8,13,14).
      - அற்புதம் என்பது இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட செயல்களை கையாளுகிற தேவனாலே தம் பிள்ளைகளின் தேவைகள் சந்திக்கப்பட இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் தேவன் வழங்குதல் ஆகும் (1 இராஜாக்கள் 17:4). இன்றைய நாட்களில் தேவன் தமது பிள்ளைகளுக்கு வழங்குதல் மூலமாகவே தேவைகளை சந்திக்கிறார். இன்றைய நாட்களில் இயற்கையின் விதிகள் மூலமாக ஜெபித்தால் மட்டுமே ஞானம் அருளப்படுகின்றது (யாக்கோபு 1:5-7).

i. மோனோதீஸம் (Monotheism) - இது 'ஒரு கடவுள் கொள்கையாகும்'. 'மோனோ' என்பதற்கு ஒன்று என்றும்; 'தியோஸ்' என்பதற்கு 'தேவன்' என்றும் அர்த்தப்படுகிறது. 'ஒரு கடவுள் கொள்கை' என்பது தனிப்பட்ட நெறிமுறை உள்ள கடவுள் உலகில் இருக்கிறார்; அவர் உலகிலிருந்து வேறுபட்டவராக இருக்கிறார்; அவர் ஒருவர் மட்டுமே கடவுளாக இருக்கிறார் என்ற கருத்தாகும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்களும் கூட ஒரு கடவுள் கொள்கையாளர்களே! ஆனால் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வேதம் சொல்வதும் நம்முடைய விசுவாசமும் ஒரே தேவன் மூன்று நபர்களை உள்ளடக்கிய பன்மையில் ஒருமையானவர் என்பதாகும். ஆனால் இஸ்லாம் மற்றும் யூதர்களின் நம்பிக்கை தேவன் பன்மைத்துவம் உடையவர் அல்ல; அவர் ஒருமையானவர் மட்டுமே என்று கூறுகின்றனர்.

j. பானந்திஸம் (Panentheism) – ‘எல்லாவற்றிலும் கடவுள் இருக்கிறார்’ என்பதே இதன் கொள்கை. ‘பான்’ என்றால் ‘அனைத்தும்’ என்றும் ‘ன்’ என்பதற்கு உள்ளே என்றும் (இது முன்னிடைச்சொல் ஆகும்) ‘தியோஸ்’ என்பதற்கு ‘தேவன்’ என்றும் அர்த்தப்படுகிறது. இதன் கருத்து ‘எல்லாம் கடவுள்’ என்ற கொள்கைக்கு மிகவும் ஒத்ததாக இருக்கிறது. ‘பாந்திஸம்’ என்பது கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்கிறது; அதே வேளையில் ‘பானந்திஸம்’ என்பது ‘எல்லாம் கடவுள்’ ஆனால் கடவுள் அந்த எல்லாவற்றையும் விட பெரியவர் என்று சொல்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் எல்லா வஸ்துக்கலிளிலும் தேவன் இருக்கிறார்; ஆனால் எல்லாமே கடவுளின் அளவுக்கு நிகரானது அல்ல. பிரபஞ்சம் கடவுள் தான் ஆனால் கடவுள் இப்பிரபஞ்சத்தை விட பெரியவராயிருக்கிறார் என்கிறது.

k. ஹெனோதீஸம் (Henotheism) - இது ‘பல கடவுள்களில் ஒரு கடவுளை வணங்கும் கோட்பாடு’ ஆகும். ‘ஹெனோ’ என்றால் ‘ஒன்று’ என்று அர்த்தம் ஆகும். இதன் பெயர் ‘ஒரு கடவுள் கொள்கை’ போல தோன்றலாம் ஆனால் இதன் கொள்கை என்பது முற்றிலும் வேறுபட்டது. ஒரு நபர் பல தேவர்களின் பட்டியலில் இருந்து ஒரு குறிப்பிட்ட பிரத்தியேகமான தனக்குப் பிடித்த தேவனை தேர்வு செய்து அவரை தனது தேவனாக வழிபடலாம் என்ற கொள்கை உடையவது.

l. டைனமிஸம் (Dynamism) – ‘அனைத்தும் இயற்கை ஆற்றலின் விளைவு’ என்னும் கொள்கையே இந்த டைனமிஸமாகும். ‘டுனாமிஸ்’ என்றால் ‘வல்லமை’ என்று பொருளாகும். இந்த கொள்கை எல்லா வஸ்துக்களிலும் ஒரு வல்லமை அல்லது சக்தி இருக்கிறது; அதை நல்ல அல்லது கெட்ட நோக்கங்களுக்காக செயல்படுத்த முடியும். இந்த வல்லமை விவரிக்கப்படவில்லை எனவே இதை வரையறுக்க முடியாது ஆனால் இதை பயன்படுத்தவும் மற்றும் ஆராதிக்கவும் செய்யலாம். இந்த வல்லமையானது ஒரு தனிநபரை சுட்டிக்காட்டாத அல்லது பொது முறையான மனிதனை விட வலிமையான வல்லமையாய் இருக்கிறது என்கிறது இந்த கொள்கை.

m. அனிமிஸம் (Animism) - இது ஒரு லத்தீன் பதமாகும். லத்தீனில் ‘அனிமா’ என்றால் ‘ஜீவன்’ அல்லது ‘ஆன்மா’ என்று பொருள். இது ‘ஆன்ம வாத கொள்கை’ ஆகும். இயற்கை எல்லாவற்றிலும் ஆவிகள் இருக்கின்றன; அவைகள் தனிப்பட்டவைகளாகவும் மற்றும் வழிபடுபவர்களுக்கு பதிலளிக்க கூடியவைகளாகும் இருக்கின்றன. வழிபடுபவரின் செயல்பாடுகளுக்கு ஏற்ப அந்த ஆவி நன்மை அல்லது தீமை செய்யும். ஆவியினுடைய விருப்பத்திற்கேற்ப இந்த ஆவிகளிலிருந்து உதவியோ அல்லது கெடுதியோ வரமுடியும் என்கிறது இந்த ஆன்ம வாதம். இது மரம், நிலா ஆகியவற்றையும் மற்ற பலவற்றையும் வழிபடுவதால் இருக்கும்,

n. பெட்டிசிஸம் (Fetishism) - இதை ‘பற்றி வழிபாடு’ அல்லது ‘தாயித்து, சூனியம்’ முதலியவைகளில் நம்பிக்கை வைத்தல் என்று சொல்லலாம். இதன் கொள்கையானது வஸ்துக்களுக்கு ஆவிகள் உள்ளன ஆகவே, அந்த வஸ்துக்கள் ஆவியைக் கொண்டு இருப்பதால் அவைகளை வழிபடமுடியும். ஆவியானது அந்த வஸ்துவில் ஒரு தற்காலிக வாசம் செய்கிறது பின்பு அந்த பொருளை விட்டு போய்விடுகிறது என்கிறது. இதை மாயவித்தை என்றோ அல்லது சூனியம் என்றோகூட சொல்லலாம்.

o. ஐடாலேட்டரி (Idolatry) - உருவ வழிபாடு. ‘ஐடல்’ என்பது ‘ஏடலோன்’ என்ற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. ‘லேட்டரி’ என்பது ‘லேட்டரியா’ என்ற கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. ‘ஐடல் என்பதன் அர்த்தம் உருவம் என்பதாகும் ‘லேட்டரி’ என்பதின் அர்த்தம் ஆராதனை என்பதாகும். உருவச்சிலையானது நிரந்தரமான வசிப்பிடமாக உள்ளது. ஆக இது வழிபடகூடியதாக இருக்கிறது என்பது இதன் கொள்கை. இந்த சிலை ஏதாவது ஓர் உருவமாக மனிதனால் சாதாரணமாக செய்யப்படுகிறது மற்றும் அது புனிதத்தன்மை கொண்டதாகவும் கருதப்படுகிறது. ஆவி நிரந்தரமாக இருக்கிறது என்கிறது உருவ வழிபாடு ஆனால் ஆவியானது நிரந்தரமாக ஒரு வஸ்துவில் இருப்பதில்லை என்கிறது பற்றி வழிபாடு.

- அனிமிஸம் - எல்லா வஸ்துக்களும் ஓர் ஆவியைக் கொண்டவைகளாக இருக்கின்றன.
- பெட்டிசிஸம் மற்றும் ஐடாலேடரி - சில வஸ்துக்கள் மட்டுமே ஓர் ஆவியைக் கொண்டவையாக இருக்கின்றன.என்பதாகும்.

நம்முடைய தேவன் ஒருவரே ஜீவனுள்ளவர்; மற்ற யாவும் விக்கிரகங்களேயல்லாமல் வேறல்ல. என்பது தெரியும் (எரேமியா 10). விக்கிரக வணக்கம் பற்றி பேசும் தெளிவான பகுதிகளாய் இருக்கின்றன (ஏசாயா 44:14-20)

p. ஸ்கெப்டிசிஸம் (scepticism) - இது ‘ஐயுறவு கொள்கை’ அதாவது ‘சமய நம்பிக்கையின்மை’ ஆகும். எதிலும் அவநம்பிக்கையாக இருத்தல் ஆகும். கடவுளின் இருப்பை சந்தேகிக்கிறவர்களாகவும் அதில் அவநம்பிக்கை உள்ளவர்களாக இந்த கொள்கையினர் காணப்படுகிறார்கள். இன்றைய நவநாகரீக காலத்தில், நாத்திகர்களே ஐயுறவு கொள்கையாளர்களாக வரையறுக்கப்படுகிறார்கள். ஏனெனில், அவர்கள் கடவுள் இல்லை என்று நிரூபிக்க முயற்சிப்பதால் அவர்கள்தான் ஐயுறவு கொள்கையாளர்களாய் இருக்கலாம் என்பதை நிரூபிக்க வலுவான சாத்தியமாகியிருக்கிறது. சங்கீதம் 19-ன்படி தேவன் தாம் இருப்பதை தெளிவாய் வெளிப்படுத்தியிருக்கிறார் ஆகவே, தேவன் இல்லை என்று சந்தேகிப்பது மதியீனமான காரியமாய் இருக்கிறது.

q. மெட்டீரியலிசம் (Materialism) - பொருள்முதல்வாதம். இந்த வாதம் ஆவியின் உலகம் என்று எதுவுமில்லை ஆனால் பருப்பொருள் மட்டுமே அதாவது விஷயம் மட்டுமே உண்மை என்கிறது. பருப்பொருள் மட்டுமே இருத்தலில் உள்ளது; பருப்பொருட்களை படைத்தவரான கடவுள் இல்லை என்றும்; வாழ்க்கையில் பணமும் உடைமைகளும் முக்கியமானது என்கிறது.

ஆனால் பரிசுத்த வேதம் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் என்று தெளிவாய் சொல்லுகிறது (2 கொரி 4:18).